அது எப்படி நியாயம் என்பது அங்கத்தினர்களுக்கே தெரியும். இதை யெல்லாம் விசாரணை செய்துதான் அவர்கள் தகுதியில்லாதவர்கள் விதிக்கு உட்படாதவர்கள் என்று நிராகரிக்கப்படுகிறது.

திரு. ஆ. தியாகராஜன் : உண்மையில் பொற்கொல்லர்கள், தங்கக் கட்டுப்பாட்டினுல் அவதிக்குள்ளானவர்கள், தாங்கள் பொற்கொல்லர்கள் என்று ஏதாவது மனுச் செய்துக்கொண்டால், "நீங்கள் பொற் கொல்லர்கள் இல்லை" என்று அங்கே இருக்கிற அதிகாரிகள் சொல்லு கிருர்கள். அவர்கள் பொற்கொல்லர்கள் என்று நிரூபிப்பதற்கு என்ன வழியைப் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர்கள் அவர்கள் தெரிவிப் பார்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நாங்கள் இதற்கு விதிகள் செய்திருக்கிருேம். அங்கிருக்கிற தாசில்தாரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிக் கொண்டு வந்தால் போதும்.

திரு. எஸ். முத்துலிங்கம் : வட ஆற்காடு ஜில்லா, வந்தவாசி தாலுக்கா வைச் சேர்ந்த சில பகுதிகளில் தங்கக் கட்டுப்பாட்டினுல் பாதிக்கப்பட்டவர் களுக்கு சில லைசென்ஸ்கள் வழங்கப்படவில்லை என்பது குறித்து அரசாங்கத் திற்கு ஏதாவது புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அரசாங்கம் என்ருல் பெரிய "ஆர்கனைஸேஷன்". அஸிஸ்டெண்ட் டைரக்டரிடமிருந்து மந்திரி வரை யிலும் அரசாங்கம்தான். என்னைப் பொறுத்தவரையிலும், அந்த வித மான புகார் வரவில்லை என்று சொல்லிக்கொள்கிறேன். கீழ் அதிகாரி களிடத்தில் வந்திருக்கிறதா என்பதைச் சொல்லவேண்டுமென்ருல், தனிக்கேள்வி போட்டால், அவர்களைக் கேட்டுச் சொல்ல முடியும்.

Establishment of Industries in private and public sectors

* 237 Q.—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state the industries, in public and private sectors already established and proposed to be established in the State with foreign aid and technical collaboration?

The Hon. Sri R. VENKATARAMAN : The following are the industries already established in the public sector in Madras State with foreign assistance and technical collaboration :

1. Integral Coach Factory, Perambur.
2. Neyveli Lignite Project, Neyveli.
3. Teleprinter Factory, Guindy.

The following is the list of industrial undertakings which are in the process of construction or are proposed to be established with foreign assistance and technical collaboration :—

1. High Pressure Boiler Plant, Tiruchirappalli.
2. Surgical Instruments Factory, Nandambakkam.
3. Raw Photographic Films Factory, Ootacamund.
4. Heavy Vehicles Factory, Avadi.
5. Defence Equipment Factory, Tiruchirappalli.
6. Petroleum Refinery.
7. Fertilizer Factory.
8. Neyveli-Salem Steel Project.

15th March 1965]

The Government have no information regarding foreign assistance and technical collaboration in respect of industries in the private sector.

திரு. செ. மாதவன் : ஆங்கிலம் அகற்றப்பட்டால், வெளிநாட்டு முதலாளிகள் இங்கே வருவதற்கு அஞ்சுவார்கள் என்று அமைச்சர் அவர்கள் கருதுகிறார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : It is a personal opinion.

திரு. இரா. நெடுஞ்செழியன் : அண்மையில் அமெரிக்க தூதுக் குழுவினர் தென்னாட்டைச் சுற்றிப்பார்த்து, தமிழகத்தைப் பார்த்துவிட்டு, இன்னும் புதிய தொழில்கள் அமைப்பதற்கு ஏற்ற சூழ்நிலையும், அதற்கேற்ற திறமையும், அதற்கேற்ற கல்வியும் அமைந்திருக்கிறது என்ற கருத்தையும் வெளியிட்டிருக்கிறார்கள். அதனையொட்டி புதிய தொழிற்சாலைகள் அமைப்பதற்கு ஏதாவது வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நேற்று முன் தினம் 13-ம் தேதி அவர்கள் (தூதுக் குழுவினர்) என்னிடம் ஒரு மணிநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டிலே நல்ல திறன் இருக்கிறது, தொழில்கள் ஆரம்பிப்பதற்கான நல்ல "கிளைமேட்" சூழ்நிலை இருக்கிறது, அதனால் இன்னும் ஏதாவது புதிய தொழிற்சாலைகள் ஆரம்பிப்பதற்கு வழிகள் ஏற்படுமானால், அதற்கு அவர்கள் முன்வருவார்கள் என்ற ஒரு "அஷ்யூரன்ஸ்" கொடுத்தார்கள்.

திரு. வை. சங்கரன் : வெளிநாட்டு உதவி பெறும்பொழுது, என்ன பொதுவான அடிப்படையில், நிபந்தனைகளின் பேரில் அவர்களுடைய ஒத்துழைப்பும், உதவியும் கோரப்படுகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : "கொலாபரெஷன் எக்ரிமெண்டு" எப்படி இருக்கவேண்டும் என்று சொல்வது மத்திய சர்க்காரின் பொறுப்பு. அதனால் அந்த விதிகளை என்னால் சொல்ல முடியாது.

திரு. ஜே. மாதா கவுடர் : உதகையிலே ஏற்படுத்தியிருக்கும் கச்சா பிலிம் தொழிற்சாலையில் நம்முடைய மாநில அரசாங்கத்திற்கு ஏதாவது பங்கு இருக்கிறதா ? நாம் மூலதனம் ஏதாவது போட்டிருக்கிறோமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்த மாநிலத்தில் புதிய தொழிற்சாலைகளை வெளிநாட்டிலிருப்பவர்கள் நிறுவுகின்ற முறையில், அதனை மத்திய அரசாங்கத்தின் மூலம் செய்ய வேண்டுமா? அல்லது மாநில அரசாங்கம் அவர்களுடன் தொடர்புகொண்டு தொழிற்சாலையை வைப்பதற்கு வழி இருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்கார் துறையிலே அமைக்க வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசாங்கத்தின் மூலம் அமைக்க வேண்டும். தனியார் துறையில் அமைப்பதாக இருந்தால், அயல் நாட்டிலிருக்கிற தனியார் துறையும், தமிழ்நாட்டில் இருக்கிற தனியார் துறையும் நேரடியாக அவர்கள் பேரம் பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வரலாம். ஆனால், அந்த ஒப்பந்தம் மத்திய சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: புதியதாக தொழிற்சாலைகள் துவக்குகின்ற நேரத்தில் பெரும்பாலும் நகரங்களைச் சுற்றியே தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படுகின்றன. அப்படி இல்லாமல், இனிமேல் துவங்கப்படுகின்ற தொழிற்சாலைகளை தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, கிராமப் புறங்களில் கொண்டுவருவதற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக அதுதான் சர்க்கார் கொள்கை. இண்டஸ்ட்ரீஸ் டிமாண்டு விவாதத்திற்கு வரும்பொழுது, ஜில்லா வாரியாக எங்கெல்லாம் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற

[15th March 1965

புள்ளி விவரங்களைக் கொடுக்கப்போகிறேன். அதிலிருந்து நம்முடைய தமிழ் நாட்டில்தான் பரவலாக எல்லா ஜில்லாக்களிலும் தொழில்கள் அமைந்திருக்கின்றன என்பது தெரியவரும். ஆனால், தொழிற்சாலை எந்த இடத்தில் வேண்டுமானாலும் ஆரம்பிக்கப்படலாம் என்று நினைப்பது சரியல்ல. இதற்கு சில வசதிகள் வேண்டும். போக்குவரத்து வசதி, மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடிய வசதி, அல்லது மார்கெட் வசதி, விற்பனை யாகக்கூடிய வசதி ஆகிய வசதிகளில் ஏதாவது இருக்கவேண்டும். திடீ ரென்று மனித சஞ்சாரமே இல்லாத ஒரு இடத்தில் ஏதாவது ஒரு தொழில் ஆரம்பிக்கப்படமுடியும் என்று நினைப்பது சரியல்ல.

திரு. வை. சங்கரன் : பொதுவாக இந்த ஒப்பந்தம் மத்திய அரசாங் கத்தின் மூலம் செய்யப்பட்டாலும்கூட, வெளிநாட்டு உதவி வேண்டும், தொழில் நுட்ப உதவி வேண்டும், ஒத்துழைப்பு வேண்டும் என்பதில், எந்த இடத்தில் வேண்டும், எதற்கு வேண்டும் என்பதை நம்முடைய மாநில அரசாங்கம் சிபார்சு செய்ய முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நேரடியாக மத்திய சர்க்கார் தான் செய்கிறது.

Acquisition of land for Industrial Estate (Nagercoil).

* 238 Q.—SRI A. KUNJAN NADAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the extent of land acquired in Nagercoil (Kanyakumari district) for the opening of an Industrial Estate; and

(b) whether compensation has been paid to the affected land owners?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) 20·70 acres.

(b) The compensation will be paid when the award is passed by the Land Acquisition Officer.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டது தவறு என்று ஏதாவது அப்பீல்கள் போட்டிருக்கிறார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அப்பீல் போடாதவர்கள் ரொம்பக் குறைவு.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நான் இதைக் கேட்பதற்குக் காரணம், குடியிருப்பு இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்கிறார்கள். அது உண்மையா என்பதைக் கேட்டேன். அதை அமைச்சர் அவர்கள் விளக்கவேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பொதுவாக எந்த இடத்தை யார் ஆர்ஜிதம் செய்தாலும், அந்த இடத்தில் "அப்ஜெக்ஷன்" வரும். அந்த "அப்ஜெக்ஷன்" மூலம் தான் கோர்ட்டுகளுக்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறது.

Regional Engineering College, Tiruchirappalli.

* 239 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the stage reached in the establishment of Regional Engineering College, Tiruchirappalli; and

(b) the details of the work pending in respect of the same?